ORIGINAL ARTICLE

# சங்க இலக்கியத்தில் சோழர்களின் வரலாறு [CAṄKA ILAKKIYATTIL CŌḺARKAḶIṈ VARALĀṞU]

# HISTORY OF THE CHOLAS IN SANGAM LITERATURE

**ஏழுமலை / Ezhumalai *[1]**

[1] Department of Tamil, Salem Sowdeswari College, Kondalampatti, Salem, India.
Email: ezhumalai10101975@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/148

**Abstract**

During the Sangam period, the Cholas were valiant and ruled the country. Historical records state that the people lived in prosperity under the Chola rule. The Cholas were the ones who greeted those who came looking for him with a smile and fed them. And also setup the water management. The Chola kings were the ones who provided the people with divine livelihoods. They revived agricultural life by conserving water. Thus the way of research shows that the sonata has become a land of gold. The history of the Cholas was greatly praised in literature. This Research to know all is the rule of the Cholas, Heroism and the living conditions of the people Explain Explores and analyzes analytically.

**Keywords:** Chola Kingdom, Administration of Cholas, Human values, Historical views.

**ஆய்வுச் சாரம்**

சங்க காலத்தில் சோழர்கள் வீரத்திலும் நாட்டை ஆட்சி செய்வதிலும் சிறந்தவர்களாகவும் விளங்கினர். சோழர்களுடைய ஆட்சியில் மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. தன்னைத் தேடிக் கொண்டு வருபவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று அவர்களுக்கு உணவளித்தவர்கள் சோழர்கள். வேண்டிய பொருள்களையும் வழங்குபவனாக சோழ மன்னன் விளங்கியதாக சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறியமுடிகிறது. நீர் மேலாண்மையை அமைத்தான். நாட்டு மக்களுக்குத் தேவையான வளமான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் சோழ மன்னர்கள். தண்ணீரை அழிவுறாமல் பாதுகாத்து வேளாண் வாழ்க்கையை விழியமாக்கினார்கள். இதனால் சோணாடு பொன் கொழிக்கும் நாடாயிற்று என்பதை ஆய்வுகளின் வழி அறியமுடிகிறது. அவ்வகையில் சோழர்களின் வரலாறு இலக்கியத்தில் பெரிதும் போற்றிப் பாடப்பட்டுள்ளதை சங்க இலக்கியப் பாடல்களின் வழியாக அறிந்து கொள்ள முடிந்தது. ஆகையால் இவ் ஆய்வானது சோழர்களின்

ஆட்சித்திறனையும், வீரத்தையும் மக்களின் வாழ்க்கை சூழலையும் விளக்கிக் கூறும் விளக்கமுறை ஆய்வாகவும் பகுப்புமுறை ஆய்வாகவும் ஆராய்ந்து அறியத்தரப்படுகிறது.

**கருச்சொற்கள்:** சோழ மன்னர்கள், ஆட்சிச் சிறப்புகள், மனித பண்புகள், வரலாற்றுச் சிந்தனைகள்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 5th February 2021, revised 10th March 2021, accepted 12th April 2021

## முன்னுரை

தமிழ் நாட்டில் வியத்தகு முறையில் கற்கோவில்கள் பலவற்றை அமைத்த பெருமை சோழர்களையேச் சாரும். கயிலாச நாதர் கோயில் பரமேஸ்வரவா;மன் கட்டிய கூரத்துச் சிவன் கோயில் முதலியவற்றைக் கட்டினர். சோழர்கள் வீரத்தில் சிறந்தவர்களாகவும் இருந்தனர். சோழர்களின் வரலாறு இலக்கியங்களை கொண்டே காணப்படுகின்றன. ஆகவே இவ்ஆய்வுக் கட்டுரையில் சோழர்களின் வரலாறு பற்றிய கருத்துக்கள் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்


மனித வரலாற்றில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களும் மன்னர்களும் நம் நாட்டை எவ்வாறு ஆட்சி செய்தார்கள் என்றும் மக்களுக்கும் மன்னர்களுக்குமிடையே இருந்த ஒற்றுமைப் பண்புகளை வலியுறுத்துவதையும் எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

## ஆய்வு அணுகுறை

இக்கட்டுரையானது சங்க இலக்கிய நூல்களில் சோழ மன்னர்கள் பற்றிய கருத்துக்களை தேடி படித்து ஆராய்ந்து அறிந்து அதன்படி கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிந்தனைகளை ஆய்வுக்கட்டுரையாக வடிவமைத்து விளக்கமுறை ஆய்வாகவும், பகுப்புமுறை ஆய்வாகவும் தரவுகள் எடுத்தாளப்பெற்றுள்ளது.

## ஆய்வு முடிவு

இவ்ஆய்வுக் கட்டுரையின் வழியாக சங்க காலத்தில் மன்னர்கள் ஆட்சி முறை எவ்வாறு அமைந்திருந்தது தற்காலத்தில் அரசியல் நடைமுறைகள் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதை ஒப்பிட்டு சங்க காலத்தில் மக்களும் மன்னர்களும் ஒற்றுமையாய் இணைந்து செயல்பட்டடை வரலாற்றுச் செய்திகளனின் வாயிலாக ஒற்றுமைப் பண்புகளை எடுத்துரைத்த அதனை பின்பற்றுவதற்கு வலியுறுத்துவதாக ஆய்வு முடிவு அமைகிறது.




*படம் 1.* சங்க இலக்கியத்தில் சோழர்களின் வரலாறு

**இரண்டாம் கரிகாலன்**

திருமாவளவன், கரிகாற் பெருவளத்தான் முதலிய பல பெயர்களைப் பெற்றவர் கரிகாலன் ஆவார். இவர் இளஞ்செட்சென்னி என்பவருடைய மகன். அரசாண்டவர் அல்லார். அரசனுக்கு இளையவர். இவர் அழுந்தூர் வேள் மகளை மணந்தவர். இவள் கரிகாலனைப் பெற்றாள். இவர் தமிழ்நாட்டைத் தன் அரசாட்சியில் கொணர அவாவி பாண்டியருடன் போரிட்டார். அப்போர் வெண்ணியில் நடைப்பெற்றது. கரிகாலன் போரில் வெற்றிப் பெற்றான் என்பதனை,

"………………நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கு
முலைக்கோள் விடாது மாத்திரை ஞெரேரெனத்
தலைகோள் வேட்டங் களிறட் டாஅங்கு
இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சின
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு பொருமகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, பா. எண். 138)[1]

என்று பெருநராற்றுப்படை கரிகாலனின் போர்த்திறத்தினைக் கூறுகிறது.

சோழநாடு என்றும் சோற்றுக்குப் பஞ்சம் இல்லாமல் இருக்கச் செய்தவன் இவ்வளவனே என்பதனை, பின்வரும் பொருநராற்றுப்படை விளக்குகிறது.

"…………பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையும் புழுக்கின்

பராஅரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெய் தொற்றி
அவையவை முனிகுவ மெனினே”
(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, பா. எண். 102-107)[1]

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவருந்து பாழ்படுதல் இன்று” (குறள் 83)[2]

என்றும்,

“முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்” (குறள் 93)[2]

தன்னை தேடிக் கொண்டு வருபவா; களை முகமலர்ச்சியோடு வரவேற்று அவர்களுக்கு உணவுகளையும் வேண்டி பொருள்களையும் வழங்குபவனாக விளங்கினான். ஆற்றின் இரு பக்கங்களிலும் கரை அமைக்க முடிவு செய்தான். பற்பல வாய்க்கால்களையும் வடி மதகுகளையும் கட்டினான். தண்ணீரை அழிவுறாமல் பாதுகாத்து வேளாண் வாழ்க்கையை விழுமியதாக்கினான். இதனால் சோணாடு பொன் கொழிக்கும் நாடாயிற்று என்பதைக் குறிப்பிடுகிறது.

இக்காரணங்களினால் கரிகாலன் கரிகாற் பெருவளத்தான் எனப்பட்டான். காவிரியாறு‘பொன்னி’ எனப் பெயர் பெற்றது. பொன்னி நாட்டை ஆண்டமையால் சோழரும் அது முதல் வளவன் எனப்பட்டார்.

“வசையில் புகழ் வயங்குவெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற் புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்”

என்று மேற்கண்ட நூற்பாவின் வாயிலாக சோழமன்னன் ஆட்சி செய்து வந்த சோழநாட்டின் பெருமைகளையும், காவிரியாற்றின் சிறப்பினையும் பற்றி பட்டினப்பாலை குறிப்பிடுகின்றன.

“தன் வைப்பி னாடு குழீஇ
மண் மருங்கினான் மறுவின்றி
ஒருகுடையா னொன்று கூறப்
பொறதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வென்வேற் குருசில்”
(பொருநரா. 226-231)
(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பட்டினப்பாலை பா. எண். 01.07)[1]

குளிர்ச்சி பொருந்திய செல்வங்களை உடைய நான்கு நிலங்களும் ஒன்றாக சோர்ந்திருக்கும் மண்ணுலகில் குற்றம் இல்லாத தன் வெண்கொற்றக் குடையினால் தன் சொல்லை உலகம் ஏற்கும்படி நீண்ட காலம் உலகை ஆட்சி செய்த சிறந்த நட்பினையும் அறக்கோட்பாட்டுடன் இசைந்து செல்லும் வழியை இவ்வுலகம் அறிவதற்குக் காரணமாக

இருக்கும் செங்கோலையும் கொண்டிருக்கின்ற கரிகாற் வளவன் வெற்றி வேலினைத் தன் கையில் கொண்டிருப்பவன். இவ்வாறு கரிகாலனின் சிறப்புகள் காணப்படுகின்றன.

**சோழன் நலங்கிள்ளி**

சோழன் நலங்கிள்ளி கரிகாற் பெருவளத்தான் மகன் ஆவான். இவன் பெரிய நாடுகளை பகைவர்கள் அஞ்ச ஆண்டு வந்தான். இவன் பலவகை படைகளைப் பெற்றவனாக இருந்தான். முதுகண்ணன் சாத்தனார், கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார் என்ற புலவர்களின் பாடல்களால் இவன் வரலாறு விளங்குகிறது.

நெடுங்கிள்ளி உறையூரை தனதாக்கிக் கொண்டதால், நலங்கிள்ளி பெருஞ்சீற்றம் கொண்டு போருக்குப் புறப்பட்டான். நெடுங்கிள்ளியினது ஆவூர் கோட்டையை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளை அடைத்துக் கொண்டு உள்ளே அமைதியாக இருந்து வந்தான். வெளியே இருந்த நாட்டுப் புறங்கள் அல்லலுற்றன. போரால் துன்புற்றன. இதனை அறிந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளியைப் பார்த்து கூறுவது புறநானூறு வழி காணப்படுகிறது.

“இரும்பிடித் தொழுதியோடு பெருங்காயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கைய, வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர் …..
…………………………………………
……………………………………….
நாணுத்தக உடைத்து இதுகாணும் காலே”

(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை பா. எண். 226-231)[1]

என்று நெடுங்கிள்ளியின் பிடிவாதத்தையும் நலங்கிள்ளி அவனைவிடாது பின் தொடா;ந்து சென்று உறையூரை முற்றியிருந்ததையும் கண்டு மனம் வருந்திய கோவூர் கிழார் இருவரையும் உளம் உருகப் பார்த்து,

“இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தொாயவோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதுஉம் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தோர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்இகலே”

(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை பா. எண். 226-2318)[1]

உன்னை எதிர்ப்பவன் பனம்பூமாலை சூடிய சேரன் அல்லன. வேப்பம் பூ மாலை சூடிய பாண்டியனும் அல்லன். ஆத்தி மாலை அணிந்த சோழனே. ஆதனால் உங்களில் ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழர் குடியே ஆகும். போரில் இருவரும் வெல்லுதல் இயல்பும் அன்று.

இவை உம் இருவருக்கும் உகந்தது அன்று. ஆதலால் போரைக் கைவிடுக என்று கோவூர் கிழார் கூறுகிறார்.

இந்நிலையில் சோழன் நலங்கிள்ளியால் பரிசில் பெற்ற இளந்தத்தன் என்ற புலவன் உறையூருக்குள் புகுந்து நெடுங்கிள்ளியைக் காண வந்தான். அவன் பகைவனிடமிருந்து வந்ததால் ஒற்று அறிய வந்தவன் என்று தவறாக நினைத்து கொல்லத் துணிந்தான். இதனை கேள்வியுற்ற கோவூர் கிழார் சென்று நெடுங்கிள்ளியைக் கண்டு,

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய நாவின் வல்லாங்குப் பாடிப்;
பெற்றது மகிழந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந்து தன்றோ இன்றே திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே"

(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, பா. எண். 138)[1]

பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகள் போல புலவர்கள் நெடுந்தூரம் கடந்து வள்ளல்களைத் தேடிச் செல்பவர்கள். தாம் பெற்ற பொருளால் தாமும் மகிழ்ந்து சுற்றத்தினருக்கும் தந்து மகிழ்வர். இவர்கள் பிறருக்குத் தீங்கு செய்யார். அறிவால் வென்று நிமிர்ந்து நடப்பவர் புலவர்கள் அரசர்களுக்குச் சமமானவர்கள் புலவர் பெருமக்களே ஆவர் என்று எடுத்துரைக்கிறார்.

உறையூரை முற்றுகை நலங்கிள்ளிக்கே வெற்றி அளித்ததென்பது தொறகிறது. நெடுங்கிள்ளி நலங்கிள்ளியுடன் போரிட்டு இறந்தான்.

"மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
ஈஎன இரக்குவர் ஆயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென் இந்நிலத்து
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது என்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உயந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் கால் அகப் பட்ட
வன்திணி நீண்முனை போலச் சென்று அவன்
வருந்தப் போரேஎன் ஆயின் பொருந்திய
தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே"

(கதிர்முருகு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, பா. எண். 102-107)[1]

என்னிடம் வந்து அரசை கேட்டாலும், உயிரைக் கேட்டாலும் கொடுப்பேன். தன்னிடம் போரிட வருபவர்கள் தூங்கும் புலியை இடறிய குருடன் போல் அழிந்து போவார் என்றும் யானையின்

காலில் அகப்பட்ட மூங்கில் முளை அழிவது போலப் பகைவரை மோதி அழிப்பேன் என்று கூறுகிறான்.

### கோப்பெருஞ் சோழன்

இவன் உறையூரைக் கோநகராக் கொண்டு சோணாட்டை ஆண்ட அரசன். சிறந்த தமிழ்ப் புலவன். அறவழி ஒழுகிய பெரியோன். பொத்தியார் என்றவரை அவைப்புலவராகக் கொண்டவன். கண்ணகனார், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதனார். பிசிராந்தையார் என்ற புலவரால் பாராட்டப் பெற்ற பெருந்தகையான்.

### பழகா நட்பு

பாண்டிய நாட்டிற் பிசிர் என்பது ஓர் ஊர் ஆகும். அதனில் ஆந்தையார் என்ற தமிழ் புலவர் இருந்தார். சோழனுடைய நல்லியல்புகளை கேட்டறிந்து பேரன்பு கொண்டார்.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு" (குறள் 782)[2]

பிசிராந்தையார், சோழன் இவர்களின் நட்பு வளர்பிறை தன்மை உடையனவாய் வளர்ந்து கொண்டே இருந்தன.

"அன்னச்சேவல், அன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம் முகில்நிலா விளங்கும்
மையன் மாலையாம் கையறுபு இணையக்
குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை ஆயின் இடையது
சோழன்நன் நாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்குஎம்
.....................................நல்குவன நினைக்கே"
(புறநானூறு 67) (பாலையன், 1992)[3]

ஒருநாள் பிசிராந்தையார் சோழனை நினைத்து அன்னச் சேவலை விளித்துப்பாடிய பாட்டு அவரது நட்பினை நன்கு விளக்குவதாகும். கோப்பெருஞ் சோழன் நல்லியல்புகளுக்கு மாறாக அவன் மக்கள் தீய இயல்புகளைப் பெற்றிருந்தனர். கோப்பெருஞ்சோழன் பெரும் படையுடன், தன் மக்கள் மீது போர் புரிய சென்றான். அந்நிகழ்ச்சியைக் கண்ட அவைப் புலவராகிய புல்லாற்றூர் எயிற்றியனார் என்ற புலவர் பெருமான் அரசனை நல்வழிப்படுத்த விழைந்தார்.

"மண்டு அமர்அட்ட மதனுடைய நோன்தாள்
வெண்குடை விளக்கும், விறல்கெழு வேந்தே!
பொங்கு நீர்உடுத்த இம் மலர்தலை உலகத்து
பென்தலை வந்த இருவரை நினைப்பின்,

தொன்றுறை துப்பின்நின் பகைஞரும் அல்லர்
…………………………
…………………………..
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே”
(புறநானூறு 213) (பாலையன், 1991)[4]

“நகுதற் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு” (குறள் 784)[2]

போரில் பகைவரை அழித்த வலிமையான தாளையும் வெண்கொற்றக் குடையையம் உடைய வேந்தனே! நீ உலகை வெறுத்துத் தேவர் உலகம் செய்த பின்னர் இவ்வரசாட்சிக்கு உரியவர் அவவே ஆவர். அவரை நீ வென்ற பின்னர் யாருக்கு இந்த நாட்டை அளிப்பாய? நீ அவர்களிடம் தோற்று விட்டால் பகைவர் மகிழ்வர் உலகில் பழியை நிறுத்துவாய். சான்றோர்கள் உன்னை விருப்பத்தோடு மதிக்கக் கூடிய அளவிற்கு நற்காரியங்களை செய்க என்று கூறினார்;

“கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய,
வழுவின்று பழகிய கிழரையர் ஆகினும்
அரிதே, தோன்றல் அதற்பட ஒழுகல் என்று
ஐயம் கொள்ளன்மின், ஆறறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேன் டலனே
தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த அவற்கு இடமே”
(புறநானூறு 219) (பாலையன், 1991)[4]

**அரசன் வடக்கிருத்தல்**

கோப்பெருஞ்சோழன் மிகவும் நல்லியல்புடையவன். தான் வடக்கிருத்தலை தன் நண்பனுக்கு உணர்த்த விரும்பி அறவுரைகளை கூறினான். “பாண்டிய நாட்டில் நெடுந் தொலைவில் உள்ள பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்த ஆந்தையார் என் உயிர் நண்பர் (கிங்ஸ்டன் & கார்த்திகேஸ், 2017)[5]. இங்கு வருவார் என்றார். அது சாலாது என்றனர். அறிவினை உடையீர், என் உயிரைப் பாதுகாக்கும் நண்பன், செல்வம் உடைய காலத்தில் வராதினும் வறுமையுற்ற காலத்தில் வந்தே தீருவேன் என்றனன் (Raghavan et. al, 2014)[6].

**ஆந்தையார் வடக்கிருத்தல்**

ஆண்டுகள் பல ஆயினும் நரை இல்லாமல் காணப்பட்டார். கோப்பெருஞ்சோழன் நம்பிக்கையுடன் இடம் ஒதுக்கி வைத்தது போலவே, சோழனுடன வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தார். இதனைக் கண்ட கண்ணகனார் என்ற புலவர்,

**“**பொன்னும்**,** துகிரும்**,** முத்தும்**,** மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச்சேய ஆயினும், தொடைபுணர்ந்து,
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,
ஒருவழித் தோன்றியாங்கு எங்கும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலார் ஆகுபவே"
(புறநானூறு 221) (பாலையன், 1991)[4]

பொன்னும் பவளமும் முத்தும் மணியும் நிலம், கடல் முதலியவற்றில் உண்டாவன. இவை ஒன்றுக்கொன்று சேம்மைய ஆயினும் அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களை செய்யும் பொழுது அவை ஓரிடத்துத் தோன்றினாற் போல எப்பொழுதும் சான்றோர் சான்றோர் பக்கத்தினர் ஆவர் (Kumar, 2018)[7].

**முடிவுரை**

மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக சங்க இலக்கியத்தில் சோழர்களின் வரலாறு குறித்த கருத்துக்களை மேற்கோள்களின் வாயிலாக நாட்டின் செல்வ வளத்தைப் போற்றிப் பாதுகாத்தமையையும், மக்களிடம் கொண்டிருந்த நற்பண்புகளையும், நட்புறவுகளையும், மக்களும் மன்னனும் எவ்வாறு ஒற்றுமையுடன் வாழ்ந்தனர் என்பது பற்றியக் கருத்துக்களையும் அறிய முடிகிறது. ஆகவே இக்கட்டுரையின் வாயிலாக வளரும் சமுதாயத்திற்கு சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் பற்றியும் மன்னர்களின் ஆட்சிமுறைப் பற்றியும் அறியத்தரவதாக இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

**References:**


1. Kathirmurugu. (2009). *Pattuppāṭṭu [Pathuppattu]*. Chennai: Saratha Publication.
2. Ramasamy (1991). *Tirukkuṟaḷ [Thirukural]*. Chennai: Shri Hindu Publications.
3. Balaiyan, A.P. (1992). *Puṟanāṉūṟu [Puranaanooru]*. Chennai: Gowra Agency.
4. Balaiyan, A.P. (1991). *Puṟanāṉūṟu [Puranaanooru]*. Chennai: Gowra Agency.
5. Kingston Pal Thamburaj & Kartheges Ponniah. (2017). Hierarchical Grammatical Tagging for Tinai (Landscape) of Cankam, Tamil Literature, *Indian Journal of Science and Technology*, Issn:0974-6846, Vol:9, Issue:48. Pgs. 1-4.
6. Raghavan, D., Vijaya, Tejus Murthy, A.G., & Somasundaram, O. (2014). Treatment of the mentally ill in the Chola Empire in 11 th -12 th centuries AD: A study of epigraphs, *Indian Journal Psychiatry*, Volume: 56, Issue Number:2, Page: 202-204.
7. Kumar.J. (2018). Visual documentation techniques of Chola Kings through their Sculpture, *International Journal of Research and Analytical Reviews*, Volume 5, Issue 3, 460-463.